அல்லது இரண்டும்கூட வைக்காமல் கட்டினார்களா என்றுகூட எனக்கு சந்தேகம். அந்த அளவுக்கு ஒரு தரமற்ற dam-ஐ கட்டியிருக்கிறார்கள். அதனால் வெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டது. இதுகுறித்து, கட்டப்பட்டவர்மீது வழக்கு தொடுக்கப்பட்டு, அது தனியாக நடந்துகொண்டிருக்கிறது. அது மீண்டும் கட்டப்பட வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்து இல்லை. அது வழக்கில் இருக்கிறது. அதற்குத் தனியாக ஒரு திட்டம் தயாரித்துக்கொண்டிருக்கின்றோம்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 244, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

244—

மேம்பாலம்

***58339— திரு. A.P. நந்தகுமார்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், விரிஞ்சிபுரம், பழுதடைந்த பாலாறு தரைப் பாலத்திற்கு மாற்றாக புதிய மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கடந்த 2021 ஆம் ஆண்டு, அக்டோபர், நவம்பர் மாதங்களில் இதுவரை காணாத அளவிற்கு வேலூர் மாவட்டத்தில் மழை பெய்தது. அதனால் கே.வி. குப்பம், செதுவாளை, விரிஞ்சிபுரம் வழியாக பாலாற்றின் குறுக்கே அமைந்துள்ள பாலம் முழுமையாகச் சேதமடைந்து, போக்குவரத்து செல்ல முடியாத அளவிற்கு அது சீர்கெட்டது. இந்த நிலையில் இந்தத் தரைப் பாலத்தை Central Road and Infrastructure Fund *(*CRIF*) 2022–2023 திட்டத்தின்கீழ் உயர்மட்டப் பாலமாகக் கட்ட தேசிய நெடுஞ்சாலை அலகு மூலமாகக் கருத்துரு பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் இப்போது உள்ளது.*

2022 மே 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள்.*

திரு. A.P. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி மற்றும் கே.வி. குப்பம் ஊராட்சிகளை இணைக்கக்கூடிய பாலாற்றுப் பாலமானது கடந்த மழையால் அடித்துச் செல்லப்பட்டு, போக்குவரத்தும், மக்களும் செல்லமுடியாத நிலையில் இருந்தது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் பார்வைக்குக் கொண்டு சென்றபோது, அந்தப் பாலம் இப்போது தற்காலிகமாக மக்கள் பயன்பாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் வேலூருக்கு செல்ல வேண்டுமென்றாலும், கே.வி. குப்பத்திற்கு செல்ல வேண்டுமென்றாலும் அந்தப் பாலத்தின் வழியாகத்தான் செல்ல வேண்டும். அந்தப் பாலம் உயர்மட்டப் பாலமாக அமைத்துத் தரப்படும் என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கின்றார்கள். அந்தப் பாலத்தை விரைந்து அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் 1972 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இது 322 மீட்டர் நீளமும், 7 மீட்டர் அகலமும் கொண்ட பாலம். இது வேலூர் மாவட்டத்தில் அவசியமான ஒரு பாலம். அதனால்தான் அதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு, 2017 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட PCU 9,752 என்ற நிலையிலே அந்தப் பாலத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, Central Road and Infrastructure Fund (CRIF) மூலமாக இந்தப் பாலத்தை இந்த ஆண்டே அதாவது, 2022–2023-ல் அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசு கருதிய காரணத்தினால்தான் அதற்கு வேண்டிய பணிகளை இன்றைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதனால் மக்களுடைய பயன்பாட்டிற்கு அந்தப் பாலம் உடனே கொண்டு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் 8 தரைப் பாலங்கள் உள்ளன. இந்த 8 தரைப் பாலங்களில், NABARD மூலமாக கிராமச் சாலை அலகின் மூலமாக, 6 பாலப் பணிகளை இன்றைக்கு செய்துகொண்டிருக்கிறோம். எனவே, வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் பாலங்களுக்கு

முன்னுரிமை அளிக்கப்படும். பாலாறு முழுக்க முழுக்க வேலூர் மாவட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிற காரணத்தினாலும், அந்தப் பகுதியில் இருக்கின்ற பல நகரங்களை இணைக்கின்ற பாலமாக இருக்கின்ற காரணத்தினாலும் இந்த ஆண்டே அதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள்.

திரு. A.P. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் பள்ளிகொண்டா பேரூராட்சி அமைந்திருக்கிறது. கர்நாடகா மற்றும் ஆந்திரா மாநிலங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் பள்ளிகொண்டா வழியாகத்தான் செல்ல வேண்டும். 7 மீட்டர் அகலம் கொண்ட அந்தச் சாலையின் இருபுறமும் அதிகமான திருமண மண்டபங்கள் இருக்கின்றன. புகழ்பெற்ற பள்ளிகொண்டா அரங்கநாதர் கோயில் அங்கே இருக்கின்றது. போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு தினமும் மக்கள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். Ambulance செல்வதற்குக்கூட அங்கே வழி இல்லை. ஆகவே, அந்த மக்களின் துயரைப் போக்க மாண்புமிகு தலைவர் தளபதி அவர்களின் ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பள்ளிகொண்டாவிற்கு புறவழிச் சாலை அமைத்துத் தர ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளிகொண்டா நகர் நானும் அறிந்த ஒன்று. அதற்குப் புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்று, நம்முடைய அவை முன்னவர், மூத்த அமைச்சர் அவர்கள் என்னிடத்திலே நேரடியாகவும் சொல்லியிருக்கிறார்கள்; நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் நேரடியாக என்னிடத்தில் கடிதம் கொடுத்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் பள்ளிகொண்டா முதல் சேத்துவாண்டை வரையில் புறவழிச் சாலை அமைக்கும் பணிக்கு, விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு 4-5-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கிறது.

2022 மே 9]

பள்ளிகொண்டா புறவழிச் சாலை. தேசிய நெடுஞ்சாலை NH 46, பள்ளிகொண்டாவிலிருந்து ஆரம்பித்து, குடியாத்தம் இரயில் நிலையம் வழியாகச் சென்று, NH 234 சேத்துவாண்டையில் அது முடிவடைகிறது. இதனுடைய நீளம் சுமார் 7 கிலோ மீட்டர் தூரம்; அகலம் 10 மீட்டர் ஆகும். பள்ளிகொண்டாவிலிருந்து ஓர் ஆற்றுப் பாலமும், குடியாத்தம் இரயில் நிலையம் அருகே ஓர் இரயில்வே மேம்பாலமும் அமைப்பதற்குத் திட்ட மதிப்பீடுகள் தயார் செய்துகொண்டிருக்கிறோம். எனவே, 30 மீட்டர் அகலத்திற்கு நில எடுப்புப் பணிகள் செய்ய பூர்வாங்க நடவடிக்கையை இப்போது அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர்-விக்கிரவாண்டி தேசிய நெடுஞ்சாலை 45 C. அதில் கும்பகோணம்–தஞ்சாவூர் பகுதி என்னுடைய தொகுதியில் செல்கின்றது. இந்த நெடுஞ்சாலை குண்டும் குழியுமாக இருக்கின்றது. தேசிய நெடுஞ்சாலை முகமையிடம் பல முறை புகார் அளித்தும் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லாத ஒரு சூழலில் சென்னை–விக்கிரவாண்டி–தஞ்சாவூர், தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் முடிவடைந்த பிறகுதான் இந்தச் சாலை நம்முடைய மாநில நெடுஞ்சாலையிடம் ஒப்படைக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால், சாலை மிகவும் பழுதடைந்திருக்கின்ற காரணத்தினால், உடனடியாக இந்தச் சாலையை நம்முடைய மாநில நெடுஞ்சாலை வசம் எடுத்து, அதேபோன்று பண்ருட்டி பகுதியிலும் அந்தச் சாலை மிகவும் பழுதடைந்திருக்கிறது. இரண்டையும் சீர்செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

[2022 மே 9

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி முதல் தஞ்சாவூர் வரை செல்கின்ற சாலை, நீண்ட நாட்களாக அமைக்கப்படாமல் பத்திரிகைகளிலும் வாரப் பத்திரிகைகளிலும் பல்வேறு செய்திகள் வந்தன. இப்படி அதுகுறித்த செய்திகள் அதிகமாகி அதிகமாகி, தேர்தல் நேரத்தில் பிரச்சாரத்திற்குச் சென்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையிலேயே அதனைக் குறிப்பிட்டிருக்கின்றார். விக்கிரவாண்டி–தஞ்சாவூர், கும்பகோணம் வழியாகச் செல்கின்ற சாலையை விரைந்து நாங்கள் செய்து முடிப்போம் என்று தேர்தல் அறிக்கையில் நாங்கள் குறிப்பிட்டிருக்கின்றோம். அதேநேரத்தில் பிரச்சாரத்தின்போது அந்தப் பகுதியில் நாங்கள் சென்றபோது, பொது மக்களுடைய கோரிக்கையும் அதுவாகத்தான் இருந்தது. அந்தச் சாலை எப்படியிருக்கின்றது என்று சொன்னால், விக்கிரவாண்டியிலிருந்து சேத்தியாத்தோப்பு ஒரு பகுதியாகவும், சேத்தியாத்தோப்பிலிருந்து சோழவரம் ஒரு பகுதியாகவும், சோழவரத்திலிருந்து தஞ்சாவூர் ஒரு பகுதியாகவும் என மூன்று பகுதிகளாகப் பிரித்திருக்கிறார்கள். மூன்று ஒப்பந்ததாரர்கள் அந்தப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி மூன்றாவது பணியாக இருக்கின்ற சோழவரம்–தஞ்சாவூர் சாலை என்பது தொகுப்பு 3–ல் வருகிறது. இதில் கும்பகோணத்திலிருந்து தஞ்சாவூர் என்று எடுத்துக்கொண்டால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் ஜவாஹிருல்லா சொல்கிற அந்தச் சாலைதான் ஏறத்தாழ 37 கிலோ மீட்டர். ஆனால், அந்தச் சாலைக்கு பக்கத்திலிருக்கிற வேறொரு நேர்பாடு வழியாக, தேசிய நெடுஞ்சாலை என்கிற அடிப்படையிலே வேறொரு நேர்பாடை அங்கே எடுத்துக்கொண்டார்கள். ஏற்கெனவே பழைய சாலை அப்படியே சென்று கொண்டிருக்கிறது. இந்த நேர்பாடு என்று சொல்கிறபோது, கிட்டத்தட்ட 15 கிலோ மீட்டருக்கு புதிய சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 15 கிலோ மீட்டருக்கு சாலை அமைக்கப்பட வேண்டும். வட பகுதியிலிருந்து வந்திருக்கிற Patel Infrastructure Private Limited என்கின்ற நிறுவனம்தான் அந்தச் சாலையை எடுத்து, பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது. இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடனேயே தேசிய நெடுஞ்சாலையினுடைய Project Officer, தேசிய நெடுஞ்சாலையினுடைய முதன்மைப் பொறியாளர், திரு. பாலமுருகன் இவர்களையெல்லாம் அழைத்து எங்களுடைய துறையினுடைய செயலாளர் அவர்கள் ஒரு முறைக்கு மூன்று முறை நேரடியாக அதற்கான ஆய்வுக்

2022 மே 9]

கூட்டங்களை நடத்தினார்கள். அதோடு மட்டுமல்ல, நம்முடைய அரசு தலைமைச் செயலாளர் அவர்களும் இதுசம்பந்தமாக ஏற்கெனவே தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்குக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். நானே டெல்லிக்குச் சென்றபோது நேரடியாக மாண்புமிகு திரு. நிதின்கட்கரி அவர்களிடம் இதனைச் சொன்னேன். இந்தச் சாலையைப் போடுவதிலே பல ஆண்டுக் காலமாக பல பிரச்சினைகள் இருக்கின்றன. நிலம் எடுப்பதில் பிரச்சினை இருக்கின்றது; மின் கம்பங்களை அகற்றுவதிலே பிரச்சினை இருக்கின்றது; அந்த வழிகளில் ஆங்காங்கே சாலை போடாமல் இருப்பதையெல்லாம் குறிப்பு எடுத்துக்கொண்டு, மாநில அரசாங்கம் எவற்றையெல்லாம் தீர்க்க முடியுமோ அவற்றை விரைந்து தீர்த்துக்கொண்டிருக்கிறது.

இந்த அடிப்படையில் Patel Infrastructure Private Limited *என்கின்ற நிறுவனம் 31–12–2022–க்குள் இந்தச் சாலையை விரைந்து முடித்துத் தருவதாக எங்களிடத்தில் சொல்லியிருக்கிறது. எனவே, அந்தப் புதிய சாலை அமைக்கின்ற பணியின் ஒரு பகுதி அப்படியே இருக்கின்றது. தமிழ்நாட்டைப் பொறுத்தளவிற்குப் புறவழிச் சாலைகளை நகரப் பகுதிகளில் அமைத்துவிடுகிறார்கள். ஏற்கெனவே சென்று கொண்டிருக்கிற அந்தத் தேசிய நெடுஞ்சாலை நகரப் பகுதிக்குள் சென்று கொண்டிருக்கிறது. அதனை யார் செய்வது? தேசிய நெடுஞ்சாலை செய்வதா அல்லது மாநில நெடுஞ்சாலை செய்வதா என்கிற பிரச்சினை இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், எங்கெங்கெல்லாம் தேசிய நெடுஞ்சாலை ஏற்கெனவே நகரப் பகுதியில் சென்று, இப்போது நேர்பாடின் காரணமாக வெளியிலே செல்கிறபோது, ஏற்கெனவே இருக்கிற பழைய சாலைகளுக்கெல்லாம் முக்கியத்துவம் தந்து, ஒன்று தேசிய நெடுஞ்சாலை ஆணையம் செய்து அதனை நம்மிடத்தில் ஒப்படைக்க வேண்டும் அல்லது அவர்கள் முடியாது என்று சொன்னால் அவர்களிடமிருந்து மறுப்பில்லா சான்று* NOC *பெற்று, மாநில அரசாங்கமாவது உடனடியாகச் செய்து முடியுங்கள் என்று ஒரு கட்டளையிட்டார்கள்.*

முற்பகல் 10–35

அந்த அடிப்படையில் ஒன்றிய அரசின் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் நான் கடிதம் கொடுத்ததன்பேரில், தமிழ்நாட்டிலுள்ள நகரப் பகுதிகளுக்குட்பட்டிருக்கிற இடங்களில் தேசிய நெடுஞ்சாலைப்

பகுதிகளையெல்லாம் நாங்களே செய்து உங்களிடத்தில் ஒப்படைத்துவிடுகிறோம் என்று அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அந்த வாக்குறுதியின் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கும்பகோணம் பழைய சாலை குறித்துக் கடிதம் கொடுக்கப்பட்டு, விரைவிலே அதற்கான ஒப்புதலையும், நிதியையும் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்தப் பணிகளைக் கட்டாயம் நாங்கள் விரைந்து செய்து முடிப்போம். புதிய சாலைகளையும் 2022 ஆம் ஆண்டுக்குள் முடிப்பதற்கு இந்த அரசு முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 245, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

245—

உடற்பயிற்சிக் கூடம்

***2582—திரு. ச. அரவிந்த் ரமேஷ்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையார் மலை ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் ஆண்கள் மற்றும் பெண்களுக்குத் தனித்தனியாக உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி, புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் தனித்தனியாக ஆண்களுக்கும், பெண்களுக்கும் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க வரும் நிதியாண்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*